**பிரஸார் பாரதி**

**அகில இந்திய வானொலி, சென்னை-4**

**29 12 2025** **MONDAY** **7.15 PM**

**ஆகாஷவாணி**

***தலைப்புச் செய்திகள்***

1. ஆராய்ச்சிப்பணிகள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்கினை எட்ட முடியும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. போர்பந்தரிலிருந்து, மஸ்கட் பயணத்தை தொடங்கியுள்ள **INSV Kaundinya** கப்பல், நாட்டின் செழுமைமிக்க கடல்சார் மரபுகளை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

3. ஆஸ்திரேலியா உடனான வர்த்தக ஒப்பந்தத்தால், இந்தியாவின் ஏற்றுமதி **8** சதவீதம் அதிகரித்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

4. புத்தாண்டு கொண்டாட்டங்களை முன்னிட்டு, தில்லியில் காவல்துறை பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

5. ரஷ்யா — யுக்ரைன் இடையே அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கு, முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**-இனி விரிவான செய்திகள்-**

<<<<<<>>>>>>

ஆராய்ச்சிப்பணிகள், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்கினை எட்ட முடியும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

ஜாம்ஷெட்பூரில் உள்ள தேசிய தொழில்நுட்ப மையத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்துகொண்டு அவர் பேசினார்.

ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஊக்கம் அளிப்பதற்காக பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோல், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காகவும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<<>>>>>

**INSV Kaundinya** கப்பல் இந்தியாவின் பழங்கால தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருப்பதுடன், நாட்டின் செழுமைமிக்க கடல்சார் மரபுகளை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த கப்பல் குஜராத் மாநிலம் போர்பந்தரிலிருந்து ஓமன் நாட்டின் மஸ்கட் துறைமுகத்திற்கு தனது முதல் பயணத்தை வெற்றிகரமாக தொடங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்த கப்பல் கட்டுவதில், நாட்டின் பழங்கால தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருப்பதை பாராட்டியுள்ள பிரதமர், அதன் வடிவமைப்பாளர்கள் உள்ளிட்ட குழுவினரின் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சிகளுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டுள்ளார்.

வளைகுடா நாடுகளையும், அதை தாண்டியும் இந்தியாவின் வரலாற்று சிறப்புமிக்க தொடர்புகள் ஏற்படுவதற்கு இந்த கப்பல் பயணம் வழிவகுக்கும் என்றும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

இந்தியா — ஆஸ்திரேலியா இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்த ஒப்பந்தம் காரணமாக, இருநாடுகளிலும் நீடித்த ஏற்றுமதி வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்திய ஏற்றுமதி பொருட்களுக்கு ஜனவரி ஒன்றாம் தேதி முதல் வரி விதிப்பு கட்டணம் முற்றிலுமாக ரத்து செய்யப்படவிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு, மூன்றாண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், வலுவான விநியோக சங்கிலி உருவாகியிருப்பதையும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்றுமதியாளர்கள் மட்டுமல்லாது குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களும் பயனடைந்திருப்பதாகவும், கடந்த நிதியாண்டில் ஆஸ்திரேலியாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 8 சதவீதம் அதிகரித்திருப்பதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

சுகாதார சீர்திருத்தங்களில் மத்திய — மாநில அரசுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு அவசியம் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

ஹரியானாவில் சுகாதாரத்துறை உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

தரமான சிகிச்சை அளிப்பது, சுகாதாரத்துறையில் தொழில்நுட்பத்தை முழுமையாக பயன்படுத்துதல், மருந்துகள் இருப்பை கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளை மாநில அரசுகள் உறுதியுடன் மேற்கொள்ள வேண்டும் என்று அப்போது அவர் வலியுறுத்தினார்.

மாவட்ட மருத்துவமனைகளில் மருந்துகள் இருப்பை ஒழுங்குபடுத்துவதுடன் ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனையிலும் 50 சதவீத தள்ளுபடி விலையில் மருந்துகள் வழங்கக் கூடிய அமிர்த மருந்தகங்களை ஏற்படுத்துதல் ஆகியவை குறித்தும் திரு ஜெ பி நட்டா விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<<<>>>>>

புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது, தலைநகர் தில்லியில் பாதுகாப்பை தீவிரப்படுத்த தில்லி போக்குவரத்து காவல்துறை திட்டமிட்டுள்ளது.

மது அருந்திவிட்டு, வாகனங்களை ஓட்டுவதால் ஏற்படக்கூடிய விபத்துகளை தவிர்ப்பது மற்றும் சாலையில் பொதுமக்களின்

பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை எடுக்க முடிவு செய்திருப்பதாக காவல்துறை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, உயர் காவல்துறை அதிகாரிகள் நேரில் பார்வையிடுவதுடன், கூடுதல் காவலர்கள் பணியமர்த்தப்பட வேண்டும் என்றும், சோதனைச் சாவடிகளில் வாகன சோதனையை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் காவல்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

<<<<<<>>>>>

இனி, நடப்பாண்டில் மத்திய அரசின் சாதனைகள் குறித்த தொகுப்பு.

**(Opening Tune — 20 Sec.)**

இதில் இன்று இடம்பெறுகிறது, பிரதமர் திரு நரேந்திர மோடியின் உறுதியான தலைமையின்கீழ் பாதுகாப்புத்துறை கண்ட சீர்திருத்தங்கள்.

**(Closing Tune — 15 Sec.)**

<<<<<<>>>>>

ரஷ்யா — யுக்ரைன் இடையே அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கு, இருநாடுகளின் அதிபர்களுடன் தாமும்

இணைந்து, முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஃப்ளோரிடாவில் நேற்று யுக்ரைன் அதிபர் திரு. வோலாடிமிர் ஜெலன்ஸ்கியுடன் பேச்சு நடத்திய பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரஷ்ய அதிபருடன் ஏற்கனவே தாம் விரிவான பேச்சு நடத்தியதாகவும், அமைதி பேச்சுவார்த்தையை அவர் விரும்புவதாகவும் கூறினார்.

**<<<<<<END>>>>>>**